தினமணி

Saturday, February 04, 2012

## தோவாளை சந்தையில் பிச்சி கிலோ ரூ.1000

First Published : 04 Feb 2012 02:46:25 PM IST

நாகர்கோவில, பிப். 3: தோவாளை பூ சந்தையில் பிச்சிப்பூ கிலோ ரூ. 1000-க்கு வெள்ளிக்கிழமை விற்பனையானது.

சில நாள்களுக்கு முன்னர் கிலோ ரூ. 300 முதல் ரூ. 400 வரை விற்பனை செய்யப்பட்டது. இப்போது பூக்களின் வரத்து குறைவால், விலை அதிகரித்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

ஆனால் மல்லிகை பூ விலை குறைந்திருந்தது. கடந்த வாரத்தில் கிலோ ரூ. 800 முதல் ரூ. 1000-ம் வரை விற்பனையான மல்லிகை வெள்ளிக்கிழமை

ரூ. 400-க்கு விற்பனையானது. மல்லிகை வரத்து அதிகரித்துள்ளதால் இந்த விலைக் குறைவு காணப்படுகிறது.

---

## மின்வெட்டு படிப்படியாக குறைக்கப்படும் : ஜெயலலிதா

First Published : 04 Feb 2012 12:50:41 PM IST

**சென்னை, பிப். 4: தமிழகத்தில் வரும் ஏப்ரல் மாதத்தில் இருந்து அடுத்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் மின் வெட்டு படிப்படியாகக் குறைக்கப்படும் என்று தமிழக சட்டப்பேரவையில் இன்று ஆளுநர் உரை மீதான நன்றி தெரிவிக்கும் உரையில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கூறியுள்ளார்.**

**மேலும், கூடங்குளம் பிரச்சினையில், போராட்டக் குழுவினருடன், மத்திய, மாநில பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் பேச்சுவார்த்தை நடத்தி பல்வேறு விவரங்களை சேகரித்துள்ளனர். தற்போது, தமிழக நிபுணர்கள் அடங்கிய மாநில குழு உருவாக்கப்பட்டு, அவர்கள் கொடுக்கும் அறிக்கையின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் முதலமைச்சர் ஜெயலலிதா கூறியுள்ளார்.**

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**நாட்டின் காபி ஏற்றுமதி 8 சதவீதம் குறைவு**

**பிப்ரவரி** 03,2012,00:09



**புதுடில்லி**: **நடப்பு காபி பருவத்தின் முதல் நான்கு மாதங்களில்**, (**அக்டோபர்**-**ஜனவரி**), **நாட்டின் காபி ஏற்றுமதி**, 79 **ஆயிரத்து** 021 **டன்னாக குறைந்துள்ளது**. **இது**, **இதற்கு முந்தைய பருவத்தின்**, **இதே காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை விட**, 7.52 **சதவீதம்** (85 **ஆயிரத்து** 455 **டன்**) **குறைவாகும்**.**இருப்பினும் இதே காலத்தில்**, **ரூபாய் மதிப்பு அடிப்படையில் காபி ஏற்றுமதி**, 20.12 **சதவீதம் வளர்ச்சிகண்டு**, 1,000 **கோடியிலிருந்து**, 1,201 **கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது**. **டாலர் மதிப்பின் அடிப்படையில் இதன் இவற்றின் ஏற்றுமதி**, 11.02 **சதவீதம் உயர்ந்து**, 2,189 **கோடி டாலரிலிருந்து**, 2,430 **கோடி டாலராக அதிகரித்துள்ளது**.**நடப்பு பருவத்தில்**, **சர்வதேச அளவில் இந்திய காபியின் விலை டன்னுக்கு**, 1.51 **லட்சம் ரூபாய் என்றளவில் உள்ளது**. **இது**, **முந்தைய பருவத்தில்**, 1.16 **லட்சம் ரூபாய் என்ற விலையில் விற்பனையானது**.**சென்ற ஜனவரி மாதத்தில்**, 20 **ஆயிரத்து** 969 **டன் காபி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது**. **முந்தைய பருவத்தின் இதே மாதத்தில்** 20 **ஆயிரத்து** 193 **டன் காபி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது**. **இருப்பினும்**, **மதிப்பின் அடிப்படையிலான இவற்றின் ஏற்றுமதி**, 288 **கோடியிலிருந்து**, 349 **கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது**.**சென்ற ஜனவரி மாத நிலவரப்படி**, **மொத்த காபி ஏற்றுமதியில்**, **அரபிகா பார்ச்மென்ட் வகை காபியின் பங்களிப்பு** 4,121 **டன்னாக உள்ளது**. **இது**, **முந்தைய பருவத்தின் இதே மாதத்தில்**, 5,723 **டன்னாக இருந்தது**

---

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

*ஒரு லட்சம் டன் வரை*

*ரப்பர் மீதான இறக்குமதி வரியை நீக்க கோரிக்கை*

*பி கே கிருஷ்ணகுமார்*
*கொச்சி*
*ஒரு லட்சம் டன் இயற்கை ரப்பரை தீர்வை எதுவுமின்றி இறக்குமதி செய்ய அனுமதி அளிக்க வேண்டும் என டயர் தயாரிப்பு நிறுவனங்கள் மத்திய அரசிடம் கோரிக்கை*

விடுத்துள்ளன. அடுத்த மாதம் மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ள நிலையில், உள்நாட்டு ரப்பர் உற்பத்திக்கும், பயன்பாட்டுக்கும் இடையிலான இடைவெளியை நிரப்பும் நோக்கத்துடன் அரசுக்கு இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

டயர் நிறுவனங்களின் மொத்த வருவாயில் இயற்கை ரப்பர் உள்ளிட்ட முக்கிய மூலப்பொருள்களுக்கான செலவினம் 70 சதவீதமாக உள்ளது. மூலப்பொருள்களின் விலை உயர்ந்து விட்டதால் செலவினமும் கடுமையாக உயர்ந்து அது லாப வரம்பில் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில் விரிவாக்க நடவடிக்கைகளால் நிறுவனங்களுக்கு நிதிச் சுமை ஏற்பட்டுள்ளது.

அண்மைக் காலத்தில் முன்னணி டயர் நிறுவனங்கள் ரூ.12,000 கோடிக்கும் அதிகமான அளவில் முதலீடுகளை மேற்கொண்டுள்ளன. அனைத்து பெரிய நிறுவனங்களும் புதிய ஆலைகள் அமைப்பதற்கும், பழைய ஆலைகளை விரிவுபடுத்துவதற்கும் கணிசமான தொகை செலவிட்டுள்ளன. வர்த்தக வாகனங்கள் மற்றும் கார்களுக்கான ரேடியல் டயர்கள் பிரிவில்தான் பெரும்பாலும் இந்த முதலீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

---

## பருவநிலை சார்ந்த

## பயிர் காப்பீட்டு திட்டத்தில் 61.60 லட்சம் விவசாயிகள்

மாதவி சாலி

புதுடெல்லி

2011 கரீஃப் பருவத்தில் (ஜூன்–அக்டோபர்) பருவநிலை சார்ந்த பயிர்க் காப்பீட்டு வசதி பெற்றுள்ள விவசாயிகளின் எண்ணிக்கை 61.60 லட்சமாக உயர்ந்துள்ளது. இத்திட்டம் அறிமுகமான 2007 கரீஃப் பருவத்தில் இந்த எண்ணிக்கை 35,000–ஆக இருந்தது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை பல்வேறு விவசாயிகளுக்கு ரூ.972 கோடி இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

அதிக மழை, போதிய மழையின்மை, கடும் வெப்பம், கடுங்குளிர் போன்ற மோசமான பருவநிலை காரணமாக பயிர்களுக்கு சேதம் ஏற்படும்போது அதற்காக விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதே பருவநிலை சார்ந்த பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் நோக்கமாகும். இதற்கான பிரிமிய தொகையில் குறிப்பிட்ட அளவை மத்திய மற்றும் மாநில அரசுகள் தலா 50 சதவீதத்தை மானியமாக வழங்குகின்றன.

2007–08–ஆம் நிதி ஆண்டில் மத்திய அரசு இந்த பிரிமியத் தொகைக்கான மானியமாக ரூ.69.19 கோடி வழங்கியது. அடுத்த மூன்று நிதி ஆண்டுகளில் இது முறையே ரூ.100 கோடி, ரூ.120 கோடி மற்றும் ரூ.450 கோடியாக உயர்ந்தது. நடப்பு நிதி ஆண்டில் ஜனவரி 27–ந் தேதி வரை வழங்கப்பட்ட மானியம் ரூ.442 கோடியாகும். ஆக, மத்திய அரசின் மானிய செலவினம் தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

---